Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.289/2016

**Depositions of PW- 7**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மகேஷ்குமார் | Occupation | காவல் ஆய்வாளர் |
| Father's name | ஜெயசீலன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of March 2026.

18.03.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி வீடியோ காணொளி மூலம் ஆஜரானார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி–**

நான் தற்போது தங்கச்சி மடம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள்

திருவில்லிபுத்தூரிலுள்ள ஸ்ரீலட்சுமி நாராயணா Explosives குடோனில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள பொருட்கள் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் ஆகும்.

1) அலுமினியம் சூப்பர் பிலிம் டிட்டனேட்டர் எண்.8 - 110 எண்ணம் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2)டிட்டனெட்டிங் கார்டு சுமார் 600 மீட்டர் வெள்ளை ஊதா சிவப்பு நிற வயர் ரோல் மொத்தம் 3 ரோல்கள் சாபொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) ஜெல்லட்டின் (Each sun 90 – 25 மில்லிமீட்டர் class 1 125 Grams, ISO 9001 – 2008 - வெற்றிவேல் Explosive Private Limited Trichy District Tamilnadu, India) - 131 எண்ணம் சாபொ.3 ஆகவும்,

4) கரிமருந்து திரி சுமார் 600 மீட்டர் சாபொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பொருட்களின் படிவம் 91 அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கின் 2ம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்துக்களானது 1 மற்றும் 2ம் எதிரிக்கு தான் பாத்தியப்பட்டது என்று ஆவணங்கள் எதையும் கைப்பற்றினேனா என்றால் 1ம் எதிரி இவ்வழக்கில் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார். 2ம் எதிரி மேற்படி நிறுவனத்தின் மேலாளர் ஆவார். அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் அவர்களிடம் இல்லாததால் அதை கைப்பற்றவில்லை. மேற்படி பொருட்கள் எங்கிருந்து வாங்கப்பட்டது என்பது குறித்தும் யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்பது குறித்தும் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தபோது அவர்கள் எந்த ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை. யாரை நான் விசாரணை செய்தேன் என்றால் அப்போது அங்கிருந்து மேலாளரான சாமி அண்ணா என்பவரை விசாரித்தேன். அவரிடம் வாக்குமூலம் பெற்றேனா என்றால் ஏற்கனவே இவ்வழக்கின் முதல் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றிருந்தால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. சாமி அண்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனத்தின் 1ம் எதிரி தான் உரிமையாளர் என்றும் 2ம் எதிரி மேலாளர் என்றும் குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்ட மருந்துகள் குறித்து வெடிபொருள் நிபுணர்களிடம் விசாரணை செய்தேனா என்றால் ஏற்கனவே வெடிபொருள் என்று கிடைத்த ரகசிய தகவலின் பேரில்தான் Q பிரிவினர் சென்றதால் தனியாக நிபுணர்களை விசாரணை செய்யவில்லை. உண்மையில் பிருத்விக் கிரானைட் என்ற நிறுவனம் உள்ளதா என்பது பற்றி விசாரணை செய்தேனா என்றால் விசாரணையின்போது அது சம்மந்தமாக அறிக்கைகள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. பெயர் மட்டும் தான் குறிப்பிட்டார்கள். அதற்கான ஆவணங்களை கைப்பற்றினேனா என்றால் அது சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் கிடைக்கவில்லை. அத்தாட்சியில் எதிரியிடம் கையெழுத்து பெறப்பட்டதா என்றால் அதுபற்றி காவல் ஆய்வாளரை தான் கேட்க வேண்டும்.

இவ்வழக்கின் அத்தாட்சி மற்றும் மற் ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி சம்பவயிடத்தில் இல்லாததால் தான் அவரிடம் கையெழுத்தும ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பிருத்விக் கிரானைட் எங்கு அமைந்துள்ளது என்பது பற்றியும் புலஎண் மற்றும் அது யாருக்கு பாத்தியப்பட்டது என்பது பற்றியும் விசாரணை செய்தேனா என்றால் அது சம்மந்தமாக விசாரணை செய்தபோது அந்த இடமானது சுந்தரபாண்டியன் என்பவருக்கு சொந்தமான என்று மட்டும் தெரிவித்தார்கள். மேற்படி சுந்தரபாண்டியனை விசாரித்து வாக்குமூலமோ அல்லது ஆவணங்களோ கைப்பற்றினேனா என்றால் பெறவில்லை. இவ்வழக்கின் சாட்சிகள் தங்களது போலீசார் விசாணையில் கொடுத்த வாக்குமூலத்திலும் தனிஅறிக்கை மற்றும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள Sri Balan Explosives என்ற நிறுவனம் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது பற்றி அதற்குரிய ஆவணங்களையும் எனது புலன் விசாரணையின்போது பெற்றேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் போலீசார் விசாரணையில் மேற்படி பிருத்விக் கிரானைட்ஸ் மற்றும் Sri Balan Explosives யாருக்கு பாத்தியப்பட்டது என்பது பற்றி குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றால் மேற்படி வெடிபொருள் வைத்திருந்த Sri Balan Explosives உரிமையாளர் மற்றும் மேற்படி வெடிபொருள் வைத்திருந்த பிருத்விக் கிரானைட்ஸ் மேலாளர் சாமி அண்ணன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனி அறிக்கையிலும் அதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அது தொடர்பான ஆவணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி Sri Balan Explosives பற்றி குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதற்காக Indian explosive Act பிரிவு 5 நீக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி வெடிபொருட்களின் தீவிரத்தை பொருத்து சட்டப்பிரிவு நீக்கப்பட்டுள்ளது. மேற்படி வெடிபொருட்களானது தீவிரம் இல்லாத பொருட்களா என்றால் சரியல்ல. நான் மேற்படி சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யாமல் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் இவ்வழக்கின் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 2ம்எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.